ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 ஆவணி மாதம்

# இந்துவேதம் கூறும் நான்வகை கடவுள்கள், நான்வகை வாழ்க்கை



"தமிழர்களால்தான் இந்த உலகில் நிலையான ஒற்றுமையையும், அமைதியையும், நிம்மதியையும், சமாதானத்தையும் உருவாக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்துவேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டு ஆவணி மாத வெளியீடு.**

# இந்துவேதம் கூறும் நான்வகை கடவுள்கள், நான்வகை வாழ்க்கை

**உள்ளுறை**


1. **"இந்து வேதத்தில் தமிழின் அருமை பெருமைகள், அரிய பயன்கள்"** - இருக்கு வேத சூலகங்கள் (சுலோகங்கள்) காண்டம்-3, மண்டலம்-8. இவை ஆதிசிவஞர் அருளிய இந்து வேதத்தில் உள்ள சூலகங்கள் ஆகும்.
2. **"இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் காப்பாற்றுவதே நம் கடமை"** - காரணீசுவரர் கருந்தடங்கண்ணியம்மை ஆலயம் உள்ள நாகைப்பட்டினத்து இந்துக்களுக்கு வழங்கிய மேடைப் பேச்சின் எழுத்தாக்கம்.
3. **"இந்துவேதம் கூறும் நான்கு வகைக் கடவுள்கள்"** - நாகைப்பட்டினம் வெளிப்பாளையத்தில் இருக்கின்ற அகத்தீசுவரர், ஆனந்தவள்ளியம்மை திருக்கோயிலில் பதினெண்சித்தர் மடத்தின் சித்தரடியாள் ஆற்றிய உரையின் எழுத்தாக்கம்.
4. **"இந்துவேதம் கூறும் நான்வகை வாழ்க்கை"** - நாகைப்பட்டினம் வெளிப்பாளையத்தில் பதினெண்சித்தர் மடம் சார்பாக ஆற்றப்பட்ட உரையின் எழுத்தாக்கம்.
5. **"குருபூசை"** - ஆவணி மாதம் முதலாம் நாள் நிகழும் குரு பூசை பற்றிய ஒரு சிறு கவிதை.
6. **"அறிவிக்கை எண் 786"** - இந்து முன்னேற்றக் கழகம் வெளியிட்ட அறிவிக்கை.

## அறிவிக்கை எண்: 1444

# இந்து வேதத்தில் தமிழின் அருமை பெருமைகள், அரிய பயன்கள்

### இருக்கு வேத சூலகங்கள் (சுலோகங்கள்) காண்டம்-3, மண்டலம்-8

இவை ஆதிசிவனுர் அருளிய இந்து வேதத்தில் உள்ள சூலகங்கள் ஆகும். காலப் போக்கில் பேச்சு வழக்கில் சூலகம் என்ற சொல் சுலோகம் என்று திருந்திய வடிவம் பெற்றது. (சுலோகம் 1இல் இருந்து 48 முடிய)

1. “தமிழரின் வாழ்வும் வளமும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

   இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-1

2. “தமிழரின் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

   இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-2

3. “தமிழர்களின் விழிச்சிக்கும், எழிச்சிக்குமுரிய ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

   இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-3

4. “தமிழர்களின் ஆட்சி மீட்சிக்கும், ஆட்சிச் செழிச்சிக்கும் உரிய

ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-4

5. “தமிழர்களின் மொழி விடுதலையும், இன விடுதலையும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-5

6. “தமிழர்களின் மொழியுரிமையும், இனவுரிமையும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-6

7. “தமிழர்களின் மொழிப் பெருமையும், இனப் பெருமையும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-7

8. “தமிழர்களின் தனிமனித வாழ்க்கைச் செம்மையும், குடும்ப வாழ்க்கைச் செம்மையும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-8

9. “தமிழர்களின் சமுதாயக் கட்டமைப்பும், அரசியல் செம்மைத் திட்டமும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-9

10. “தமிழர்களின் தாழ்ச்சி நிலைகளையும், வீழ்ச்சி நிலைகளையும் மாற்றும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-10

11. “தமிழர்களின் மீட்சிக்குரிய பயிற்சி தரும் வல்லமை இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-11

12. “தமிழர்களை ஒன்று திரட்டவும், ஒற்றுமைப் படுத்தவும் கூடிய

ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-12

13. "தமிழ்மொழியின் எழுத்து, சொல், பொருள் பற்றிய இலக்கணப் பேருண்மைகள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-13

14. "தமிழ்மொழியின் இலக்கிய வரலாறுகளும், இலக்கண வரலாறுகளும், வாழ்வியல்களும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-14

15. "தமிழ்ச் சான்றோர்களும், ஆன்றோர்களும் கட்டிக் காத்திட்ட பண்பாட்டுக் கூறுபாடுகளும், நாகரிக மேம்பாடுகளும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-15

16. "தமிழின அருளாளர்களின் போதனைகளும், சாதனைகளும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-16

17. "தமிழர்களின் தன்மான உணர்வும், தன்னம்பிக்கைப் பிடிப்பும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-17

18. "தமிழர்களைக் கட்டியிருக்கும் கட்டுக்களை வெட்டி அவிழ்த்து விடும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன"

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-18

19. "தமிழர்களின் கைகளிலும், கால்களிலும் பூட்டப்பட்டிருக்கும்

விலங்குகளை உடைத்தெறியும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-19

20. “தமிழர்களின் அடிமை உணர்வுகளையும், மிடிமை வாழ்வியல்களையும் முடிவுக்குக் கொண்டு வரும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-20

21. “தமிழர்களின் போலி வாழ்க்கைகளையும், காலி வாழ்க்கைகளையும் திருத்தி மாற்றிடும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-21

22. “தமிழர்கள் பிறருக்குக் கூலியாகச் செயல்படும் சிந்தையையும், பிறருக்கு வேலியாகச் செயல்படும் நெஞ்சத்தையும் மாற்றிடும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-22

23. “தமிழர்களின் அனைத்து வகைப்பட்ட தளர்ச்சி நிலைகளுக்கும், தாழ்ச்சி நிலைகளுக்கும் காரணமாக இருக்கின்ற எல்லாவிதமான தயக்க நிலைகளையும், மயக்க நிலைகளையும், முரண்பாட்டு நிலைகளையும் அகற்றிடும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-23

24. “தமிழர்கள்தான் இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகள், முதல் குடிகள், மூத்த குடிகள், ஆதிக் குடிகள் என்ற பேருண்மையை விளக்கிடும் சான்றுகளும், ஊன்றுகளும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-24

25. “தமிழர்களுக்கு உரிமை வாழ்வையும், பெருமை வாழ்வையும் வழங்கிடும் ஆற்றல் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-25

26. “தமிழர்களுக்குள்ள சோதனைகளையும், வேதனைகளையும் அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-26

27. “தமிழர்களின் அறுதை நிலைகளையும், அகதி நிலைகளையும் அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-27

28. “தமிழர்களின் கலக்கங்களையும், குழப்பங்களையும் அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-28

29. “தமிழர்களுக்குள் வளர்ந்து வரும் பிரிவினை வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும் அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-29

30. “தமிழர்களுக்குள் வளர்ந்து வரும் போட்டி பொறாமைகளையும், சண்டை சச்சரவுகளையும் தடுத்து அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-30

31. “தமிழர்களின் அறியாமைகளையும், புரியாமைகளையும் அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான்

இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-31

32. “தமிழர்களின் மடமைகளையும், மூட நம்பிக்கைகளையும் முழுமையாக அகற்றிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-32

33. “தமிழர்களின் வாழ்வியல்களில் உள்ள தேக்கங்களையும், வீக்கங்களையும் போக்கிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-33

34. “தமிழர்களின் வாழ்வியல்களில் உள்ள முடக்கப்பட்ட நிலைகளையும், அடக்கப்பட்ட நிலைகளையும் போக்கிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-34

35. “தமிழர்களின் வாழ்வியல்களில் தோற்றுவிக்கப்பட்டு விட்ட ஒடுக்க நிலைகளையும், நடுக்க நிலைகளையும் முழுமையாக நீக்கிப் போக்கிடும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-35

36. “தமிழர்களின் வாழ்வியல்களில் உள்ள அன்னியரின் நுட்ப திட்பமான ஆட்சி நிலைகளையும், சூழ்ச்சி நிலைகளையும் தடுத்து அகற்றி; மீட்சி அளிக்கும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-36

37. “தமிழர்களின் முன்னோர்களான முனிவர்களும், இருடிகளும், மகான்களும், ஞானிகளும், தவசிகளும் தமிழ்ச் சமுதாயத்தைக்

கட்டிக் காத்திட உருவாக்கிட்ட கோட்டைகளான அனைத்து வகைப்பட்ட கோயில்களையும் மீண்டும் செயலுக்குக் கொண்டு வரும் ஆற்றல்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-37

38. “தமிழர்களின் செயலிழந்து கிடக்கின்ற வாழ்வியல் பண்பாட்டு, நாகரிகப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், நடைமுறைகளும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும் மீண்டும் செயலுக்கு வருவதற்குரிய வழிவகைகள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-38

39. “தமிழர்களின் விழியாகவும், வழியாகவும் என்றென்றும் திகழ்ந்திடும் கொள்கைகளும், குறிக்கோள்களும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-39

40. “தமிழர்களுக்கு வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் இருக்கக் கூடிய நோக்குகளும், போக்குகளும் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-40

41. “தமிழர்களுடைய தாய்மொழியான முத்தமிழ் மொழியின் நூறுயிரக் கணக்கான சொற்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-41

42. “தமிழர்களுடைய உறவு முறைகளுக்கும், உரிமை முறைகளுக்கும் உரிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-42

43. “தமிழர்களின் உணவு நெறிமுறைகளுக்கும், உடை நெறிமுறைகளுக்கும் உரிய முழுமையான விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-43

44. “தமிழர்களால்தான் இந்த உலகில் நிலையான ஒற்றுமையையும், அமைதியையும், நிம்மதியையும், சமாதானத்தையும் உருவாக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-44

45. “தமிழர்களால்தான் உலக சமத்துவ, சகோதரத் தத்துவ பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற பேருண்மைக்குரிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-45

46. “தமிழர்களால்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-46

47. “தமிழர்களால்தான் உலக மக்களுக்கிடையில் உள்ள அகம்பாவ வெறி, ஆணவ வெறி, தன்னல வெறி, பதவி வெறி, பண வெறி, ஆதிக்க வெறி, ஆக்கிரமிப்பு வெறி, அதிகார வெறி, இன வெறி, மொழி வெறி, நாட்டு வெறி, மத வெறி முதலிய வெறிகள் அனைத்தையும் மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, நெறிப்படுத்த முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-47

48. “தமிழர்களின் ஒற்றுமைச் சிதைவும், சீரழிவும், சீர்குலைவும், சிறுமையும், வறுமையும், வீழ்ச்சியும், தாழ்ச்சியும், இகழ்ச்சியும்தான் உலக ஒற்றுமையின் சிதைவுக்கும், சீரழிவுக்கும், சீர்குலைவுக்கும், சிறுமைக்கும், வறுமைக்கும், வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் காரணமாக இருக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன”

இருக்கு வேதம் காண்டம்-3, மண்டலம்-8, சுலோகம்-48

அருளுபவர்

**அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்,**
**இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை,**
**இந்து மதத் தலைமை ஆச்சாறியக் குருபீடம்,**
**இந்து வேதாகம பாடசாலை**

அலுவலகம்:

பதினெண்சித்தர் மடம், அம்பத்தூர், சென்னை-53, தொலைபேசி: 654447

(இவை விரிவாக இருக்கு வேத உரைக்கோவை வாசகங்களில் கூறப்பட்டுள்ளன. இதே கருத்துக்கள் அசுர வேதத்திலும், அதர்வான வேதத்திலும், யாம வேதத்திலும் கூறப்பட்டுள்ளன.)

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டச்சுப் பொறி நகலாக இருந்தது.//**

ஓம்

# இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் காப்பாற்றுவதே நம் கடமை

ஓம் குரு வாழ்க! ஓம் குருவே துணே! ஓம் குருவே எல்லாம்! ஓம் குருவே போற்றி! ஓம் குருவே சரணம்!

(1) பெரியோர்களே! தாய்மார்களே! இந்துமதத்தில் ஆர்வமும், பற்றும், பிடிப்பும், பாசமும் உள்ள இந்துக்களே!

நம்முடைய கடவுள்களைப் பற்றியும், அவர்களுக்குப் பூசை செய்யும் நெறிமுறைகள், வழிமுறைகள் பற்றியும் அறிந்து, தெரிந்து, புரிந்து, பிறருக்குப் புரிய வைத்துச் செயல்படத் துணிந்து எங்கள் குருதேவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியாரைப் பேச அழைத்ததற்கு முதலில் எங்களின் இயக்கத்தின் சார்பில் பாராட்டையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(2) ஆதிசிவனாரின் நேரடி வாரிசான, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூராரின் பேரனான இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், ஞானச்சாரியார் அவர்கள் அன்றாட சாதாரண உலக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் இப் பொருளுலக மக்களுக்கு; அருளை அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள மருந்தாகவும், இந்துமதத்தை முறையாகப் பயன்படுத்தி

பத்தி சத்தி சித்தி முத்தி பெற விரும்புபவர்களுக்கு விருந்தாகவும் வழங்கி; தங்களைப் போன்ற பொதுமக்களுக்கு சேவை செய்ய, தொண்டாற்றிட எங்களைப் போன்ற சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் உருவாக்கித் தற்போது தானே தமிழகம் முழுவதும் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

(3) இந்நாட்டில் எந்த மடாதிபதியும், தன்னை இந்து வேத மதத்தின் தலைவன் என்று கூறிக் கொள்கின்ற எந்த ஒரு ஆன்மீகவாதியும் இவ்வாறு மக்களுக்குத் தொண்டாற்ற தானே வெளி வந்ததில்லை! வந்ததில்லை! வந்ததில்லை! வந்ததேயில்லை! அனைவரும் தாங்கள் விரும்புகின்ற ஏதாவது ஒரு இடத்திலோ அல்லது கோயிலிலோ ஏதாவது ஒரு கடவுளின் பெயரில் மடத்தினை அமைத்துக் கொண்டு ஏதோ சில கருத்துக்களைக் கற்றறிந்து அதன்மூலம் தமக்கென சில சீடர்களை, பத்தர்களை உருவாக்கி வருவோர்க்கும், போவோர்க்கும் வெறும் விபூதி, குங்குமம் முதலியவற்றை மட்டும் எடுத்துக் கொடுத்து விட்டு வெறும் கையைக் காட்டி, பத்தடி தூரத்தில் நின்று கொண்டு வாழ்த்து வழங்கிவிட்டு போவோர்களாகவே உள்ளனர்.

(4) அதிலும் பெரும்பாலும் பலபேர்க்கு திருநீறு, குங்குமத்தை எப்படிக் கொடுக்க வேண்டும்? அதை மக்கள் எப்படிப் பயன்படுத்த வேண்டும்? எப்படிப் பயன்படுத்தினால் என்ன பயன் கிடைக்கும் என்று கூட தெரியாமல் இருக்கிறார்கள்.

(5) இந்து வேதத்திலே 396 நூல்கள் உள்ளன. இந்து மதத்திலே அதில் பதினொன்றில் ஒரு பங்கு 36 நூல்கள் உள்ளன. இந்த எண்ணிக்கை கூடத் தெரியாது நம்மில் உள்ள மற்ற மடாதிபதிகளுக்கு. நீங்கள் வேண்டுமானால் அவர்களிடம் கேட்டுப் பாருங்கள், ‘இந்துவேதத்தில் எத்தனை நூல்கள் உள்ளன? இந்து மதத்தில் எத்தனை நூல்கள் உள்ளன?’ என்று.

(6) முதலில் அந்த நூல்களெல்லாம் எங்கே இருக்கின்றன? அவைகளை எந்த மடாதிபதியாவது படித்திருக்கிறாரா? அவற்றில் என்னென்ன கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன? அவற்றில் ஏதாவது இரண்டு அல்லது மூன்றையாவது கூறுங்கள்? என்று அந்த மடாதிபதிகளிடம் கேட்டுப் பாருங்கள். கேளுங்கள் அவர்களிடம்: இந்து வேதம் யாரால் எழுதப்பட்டது? இந்து மதம் யாரால் தோற்றுவிக்கப் பட்டது? எப்போது தோற்றுவிக்கப் பட்டது? யாருக்காகத் தோற்றுவிக்கப் பட்டது? என்று.

(7) இப்படி நம்முடைய வேத மதங்களைப் பற்றிய அடிப்படைக் கருத்துக்களைக் கூடத் தெரியாதவர்கள்; சாதாரண மக்களின் இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கூறத் தெரியாதவர்கள் எல்லாம் எப்படி 80 கோடி மக்கள் தொகை அடங்கிய இந்திய மக்களை அல்லது ஏழரை கோடி மக்கள் தொகை அடங்கிய தமிழக மக்களைக் காப்பாற்ற முடியும்? பாதுகாக்க முடியும்? அவர்களது குறைகளைக் களைய முடியும்? அவர்களின் வாழ்வில் வலிமையையும், செழிச்சியையும் எப்படிப் பெற்றுத் தர முடியும்?

(8) இவ்வாறான அனைத்து வகையான கேள்விகளுக்கும், மக்களின் மனதில் ஏற்படுகின்ற நம் மதத்தைப் பற்றிய குழப்பங்களுக்கும், நம் மதக் கருத்துக்களைப் பற்றி வாதங்களுக்கும், தம்முடைய வாழ்க்கையைப் பற்றிய பிறச்சினைகளுக்கும் ... பதில் கூற, விளக்கம் கூற, தீர்வினைத் திட்டவட்டமாகத் தரவே எம்முடைய குருதேவர், ஞானாச்சாரியார் இங்கே தங்களினிடையில் வருகை தந்திருக்கின்றார்.

(9) இந்த அரிய, பெரிய, தக்க சமயத்தினை உங்களை உங்கள் பிறச்சினைகளிலிருந்து உய்வித்துக் கொள்ள, காப்பாற்றிக் கொள்ள, பாதுகாத்துக் கொள்ள இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் அறிந்து புரிந்து செயல்படுத்திட பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

(10) இன்று தங்களைத் தாங்களே பகுத்தறிவுவாதிகள், சீர்திருத்தவாதிகள், இலக்கியவாதிகள் ... என்று கூறிக் கொள்ளக் கூடிய பெருந்தலைவர்கள் செய்யாத, செய்ய முயற்சி கூடச் செய்யாத இந்த இந்து மக்களை மாற்று வேதத்தார்களிடமிருந்தும், மாற்று மதத்தார்களிடமிருந்தும் பேணிக் காக்கும் பணியில் எங்கள் அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் எங்களைப் போன்ற படித்துக் கொண்டிருக்கக் கூடிய மாணவ மாணவியர்கள், இளைஞர்கள், படித்து முடித்து வேலைகளில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள், பெரியவர்கள், பெண்கள் முதலியவர்களைப் பல ஆண்டுகள் பயிற்சிகள் கொடுத்து, பாடம் புகட்டி, தயாரித்து அதன்மூலம் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் காப்பாற்றும் மாபெரும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கிறார்.

(11) இவ்வரிய, சீரிய பணிக்கு எங்கள் தாத்தா அழுகணிச் சித்தர் வீற்றிருக்கக் கூடிய காரணீசுவரர் - கருந்தடங்கண்ணியம்மை ஆலயம் உள்ள இந்த நாகைப்பட்டினத்து இந்துக்கள், தங்களால் இயன்ற அளவு இந்து வேதத்தைத் தழைக்கவும், இந்துமதத்தைப் பிழைக்கவும் உரிய செயல்களைச் செய்ய உழைக்க வாருங்கள்.

(12) நம் நாட்டை, வேதத்தை, மதத்தைக் காப்பாற்றுவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். பெற்ற தாயைப் பேணிக் காப்பது எப்படி ஒரு மகனின் அவசியக் கடமையாயிற்றோ; அதுபோல் பெற்ற பூமியைக் காப்பாற்றுவது குடிமக்களாகிய நமது அவசியக் கடமையாகும். பெற்ற தாயைக் காக்காதவனும், பெற்றெடுத்தப் பொன்னாட்டைக் காக்க மறந்தவனும் இருந்தும் இறந்ததற்குச் சமமாகும். எனவே, அதனை உணர்ந்து, மற்றவர்களுக்கு உணர்த்தி செயல்பட ஆர்வத்தோடு முன்வாருங்கள்.

இது நம் நாடு; இந்துவேதம் நம் வேதம், இந்துமதம் நம்முடைய மதம் என்ற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் பொங்கிப் பெருக வேண்டும்.

(13) உலக சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கப் புறப்பட்டிருக்கும் நம் தலைவர், ஞானச்சாரியாரின் சொற்பொழிவைக் கேட்ட பிறகாவது, இந்துக்களாகிய உங்களுக்கு அனைத்து உண்மைகளும் தெளிவாகப் புரியும்.

(14) இன்று நாம் அதாவது இந்துக்கள் அனைவருமே அறிவு விழித்த நிலையில் வாழ்வதே இல்லை. ஆம். இந்துக்களின் அறிவு இன்னமும் உறங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. நாம் யாரிடம் எப்படி அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்? எப்படியொரு கேவலமான மாற்றானுக்குக் கைக்கூலி போன்றதொரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? இனப் பற்றிழந்து, நாட்டுப் பற்றிழந்து, மொழிப் பற்றிழந்து, தன்மானமிழந்து, ... கொடிய, கொடூரமான, அவலமான, கேவலமான, இழிவான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில்தான் உள்ளோம்.

(15) இதனினும் கொடுமை என்னவென்றால், அதனை உணர்த்த வந்த ஞானச்சாரியாரையும் புரிந்து கொள்ளாமல்; ஏதோ மற்ற மடாதிபதிகள், பீடாதிபதிகள் போலக் கருதி, தவறான கருத்தினை உள்ளடக்கி அவர் கூறும் பேருண்மைக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிப்பதுதான்.

(16) இதுவரை எங்கள் குருதேவர் பொருளாதாரப் பற்றாக்குறை எவ்வளவோ இருந்த போதிலும், அதனைப் பொருட்படுத்தாது, அவருக்கெனக் குடும்பம் இருந்த போதும், இவ்வுலக மக்களையே,

நம் இந்துக்களையே தம் குடும்பமாகக் கருதி அதன் நலனுக்காகப் பாடுபட்டும் ஆயிரக்கணக்கான அறிவிக்கைகளையும், புத்தகங்களையும் வெளியிட்டும், சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன் (1991இல்) தஞ்சைத் தரணியிலே மாபெரும் இந்துவேத மாநாடு நடத்தியும் இதுவரை எந்த பலனும் கிடைக்கவில்லை! கிடைக்கவில்லை!! கிடைக்கவில்லை!!! கிடைக்கவேயில்லை!

எந்தவொரு மனிதனும் புரிந்து கொள்ளவில்லை! புரிந்து கொள்ளவில்லை!! புரிந்து கொள்ளவில்லை!!! புரிந்து கொள்ளவேயில்லை!

புரிந்தாலும் செயல்பட முன்வரவில்லை! முன்வரவில்லை! முன்வரவில்லை! முன்வரவேயில்லை!

(17) ஆனால், இந்த நாகைப்பட்டினத்து மக்களாகிய தாங்கள் அவ்வாறு இருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறோம். இந்துவேதம் தழைக்க, இந்துமதம் பிழைக்க உழைத்திட முன்வாருங்கள் என்றழைக்கிறோம்.

**இந்து வேதம் வளர்ப்போம்!**

**இந்து மதம் காப்போம்!**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

***//உண்மை நகல்//***

***//இதன் மூலம்: கையெழுத்துப் பிறதி நகலாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நகலிலும் எந்தக் குறிப்பும் இல்லை.//***

ஓம்

ஓம் குரு வாழ்க! ஓம் குருவே துணே! ஓம் குருவே எல்லாம்! ஓம் குருவே போற்றி! ஓம் குருவே சரணம்!

# இந்துவேதம் கூறும் நான்கு வகைக் கடவுள்கள்

நாகப்பட்டிணம் வெளிப்பாளையத்தில் இருக்கின்ற அகத்தீசுவரர், ஆனந்தவல்லியம்மை திருக்கோயிலுக்கு வந்திருக்கின்ற ஆன்மீகப் பெரியோர்களே! தாய்மார்களே! சிறுர்களே! சிறுமியர்களே!

உங்கள் அனைவருக்கும் பதினெண்சித்தர் மடத்தின் இந்து வேதாகமப் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கக் கூடிய என்னைப் போன்ற மாணுக்கர்கள், மாணுக்கியர்கள் சார்பாக நான் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு நமது குருதேவர், அந்தணர் அண்ணல், ஞாணுச்சாரியார் அவர்கள் இத்திருக்கோயிலுக்கு எழுந்தருளி இத்திருக் கோயிலுக்கும், இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள வட்டாரத்துப் பொதுமக்களாகிய தங்களுக்கும் பெருமை சேர்த்திருக்கிறுர்.

ஞாணுச்சாரியாரின் அருளுரையை, அருளார்ந்த அறிவுரையை, அறிவார்ந்த அருளுரையை, அறிவுரையை கேட்டுப் பயன் பெறுவதற்கும் நீங்கள் அனைவரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற அகத்தீசுவரர் - ஆனந்தவல்லியம்மைக்கு புத்துயிர்ப்பு குடமுழுக்குப் பூசை நடந்து பதினேழு (17) நாட்கள் ஆகியுள்ள இத்தருணத்தில் இந்துவேத

நாயகம், இந்துமதத் தந்தை, பரபிறம்மம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் எழுந்தருளியிருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

அவருடைய அருளுரையை அனைவரும் கேட்டு இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் புரிந்து கொள்ள ஏற்பாடு செய்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இதன்மூலம் அவர்களும், அவர்களுடைய வழிவழி வாரிசுகளும் புண்ணியம் செய்தவர்களாகிறார்கள்.

இன்றைக்கு நமது குருதேவர் அவர்கள் கோயில்களைப் பற்றியும், மனிதர்களைப் பற்றியும்; கோயில்களுக்கும், மனிதர்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் உங்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுவார்.

நான் இந்து வேதாகமப் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கக் கூடிய மாணவி. இங்கு உங்களுக்கு இந்து வேதத்தைப் பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும் நான் படித்துத் தெரிந்து கொண்ட கருத்துக்களில் சிலவற்றை சுருக்கமாகக் கூற வந்துள்ளேன்.

‘இந்துவேதம்’ என்பது கொள்கை; ஏட்டறிவு, Theory. ‘இந்து மதம்’ என்பது இந்துவேதத்தின் செயல்வடிவம், நடைமுறை, Practical. இந்து வேதத்திற்கென்று முன்னூற்றுத் தொண்ணூற்றாறு (396) நூல்கள் உள்ளன. இந்த முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களையும் அனைவரும் கற்றுப் பயன்படுத்துவதென்பது மிகவும் கடினம். ஆகவே மக்கள் எளிதில் பயன்படுத்திக் கொள்வதற்கேற்ப முப்பத்தாறு (36) நூல்களாக இந்து மதத்தில் வழங்கியிருக்கிறார்கள். இங்கு நீங்கள் அனைவரும் முக்கியமாக ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ‘இந்து’ என்ற சொல் ஓர் அழகிய, இனிய, செந்தமிழ்ச் சொல். அதைப் போலவே, ‘வேதம்’ என்ற சொல்லும், ‘மதம்’ என்ற சொல்லும் தூய செந்தமிழ்ச் சொற்களேயாகும். இவற்றுக்கு ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது (1359) சொற்களில் பொருள் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. நம் இந்து வேதம் பதினெண்சித்தர்களின் பீடாதிபதிகளுள் முதல் பீடாதிபதியான ஆதிசிவனார் என்பவரால் இன்றைக்கு (1994ஆம்

ஆண்டுக் கணக்கின்படி) முப்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நூற்று எழுபத்தைந்து (38,87,175) ஆண்டுகளுக்கு முன் இம்மண்ணுலகுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பதினெண்சித்தர்கள் இந்து வேதத்தில் அனைத்துக் கருத்துக்களையும் தெளிவாக, திட்டவட்டமாக, வரையறுத்துக் காலக்கணக்கீட்டு அடிப்படையில் கூறியுள்ளார்கள்.

ஏடுத்துக்காட்டு:- மறைகளைப் பற்றிக் கூறும்போது அவற்றை நான்காகப் பகுத்து நான்மறைகள் என்றும், முறைகளை நான்காகப் பகுத்து நான்முறைகள் என்றும், நெறிகளை நான்காகப் பகுத்து நான் நெறிகள் என்றும், வேதத்தை நான்காகப் பகுத்து நான்வேதங்கள் என்றும் கூறியிருக்கிறார்கள்.

இப்படி சித்தர்கள் எதையும் நான்கு, நான்கு, நான்கு என்றும்; ஏழு, ஏழு, ஏழு என்றும்; பதினெட்டு, பதினெட்டு, பதினெட்டு என்றும்; நாற்பத்தெட்டு, நாற்பத்தெட்டு, நாற்பத்தெட்டு என்றும் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே கூறியுள்ளார்கள்.

பதினெண்சித்தர்கள் இந்து வேதத்தில் கடவுள்களைப் பற்றிச் சொல்லும்போது நான்கு வகைப்பட்ட கடவுள்களாகப் பிரித்துள்ளனர்.

நான்கு வகைக் கடவுள்கள் என்போர் யார் யார்? அவர்களை எப்படி வழிபட வேண்டும்? எப்படி வணங்க வேண்டும்? எப்படி கும்பிடல் வேண்டும்? எப்படிப் பூசை செய்தல் வேண்டும்? அவற்றால் என்ன பயன்? இல்லையென்றால் என்ன பயன்? கட்டாயம் இவற்றையெல்லாம் பின்பற்ற வேண்டுமா? ... என்பன பற்றியெல்லாம் தெளிவாகக் கூறுகிறார்கள் பதினெண்சித்தர்கள்.

நான் இங்கு நான்கு வகைப்பட்ட கடவுள்களைப் பற்றி உங்களுக்குச் சுருக்கமாகக் கூறுகின்றேன். நான்கு வகைப்பட்ட கடவுளர்கள் யார் யாரெனில், 1. குடும்ப ஆண்டவர்கள், 2. குலதெய்வங்கள், 3. கிராம தேவர் தேவதைகள், 4. நாட்டுக் கடவுள்கள் ஆவார்கள்.

**குடும்ப ஆண்டவர்கள்:-** அதாவது ‘ஆண்டவர்கள்’ என்றால் ‘மாண்டவர்கள்’ என்று பொருள். இந்துவேதத்தில் “இனம் காக்க மாண்டவர் ஆண்டவரானார்” என்று குறிக்கப்பட்டுள்ளது. நம்முடைய குடும்பத்தில் இறந்த நம்முடைய அப்பா, தாத்தா, பாட்டி, அல்லது சிறுவயதிலேயே இறந்து போன சிறுமிகள், சிறுவர்கள், கன்னிப் பெண்கள் ... இவர்களெல்லாம் குடும்ப ஆண்டவர்கள். இவர்களை நாம் கண்டிப்பாக வழிபட்டேயாக வேண்டும். அப்போதுதான் நம் குடும்பம் செழிப்பானதாக இருக்கும். நம் குடும்பத்திற்கு வரக்கூடிய தீமைகள், கெடுதல்கள் முதலியவைகளிலிருந்து அவர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள். எனவே, எல்லோரும் கட்டாயமாக அவரவர்களுடைய குடும்ப ஆண்டவர்களைக் கும்பிட்டேயாக வேண்டும், வழிபட்டேயாக வேண்டும், வணங்கியே ஆக வேண்டும், பூசை செய்தேயாக வேண்டும்.

**குலதெய்வங்கள்:-** குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த பல குடும்பத்தினர்கள் ஒன்றாக இணைந்து கும்பிடப் படுபவர்கள், வழிபடப் படுபவர்கள், வணங்கப் படுபவர்கள், பூசை செய்யப் படுபவர்கள் குலதெய்வங்கள் எனப்படுவர். அதாவது நம்முடைய குலத்திற்காகப் பாடுபட்டு இறந்தவர்கள், வீரமரணம் அடைந்தவர்கள் குலதெய்வங்கள் ஆவார்கள். அவர்களை நாம் கட்டாயம் வழிபட்டேயாக வேண்டும்; கும்பிட்டேயாக வேண்டும்; பூசைசெய்தேயாக வேண்டும்; வணங்கியேயாக வேண்டும். அப்போதுதான் நம் குலம் செழிக்கும், வளம் கொழிக்கும்.

**கிராமதேவர் தேவதைகள்:-** ஒவ்வொரு கிராமத்துக்கும் அந்தந்த கிராம மக்களைப் பாதுகாப்பதற்காகவும், கிராமங்கள் செழிப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகவும், அந்தந்த கிராம தேவர் தேவதைகளை கும்பிட்டேயாக வேண்டும், வழிபட்டேயாக வேண்டும், வணங்கியேயாக வேண்டும், பூசைசெய்தேயாக வேண்டும் என்று பதினெண்சித்தர்களின் இந்துவேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் என்றைக்கு நம்முடைய கிராம தேவர் தேவதைகளை வழிபட மறந்தோமோ, வணங்க

மறந்தோமோ, கும்பிட மறந்தோமோ, பூசைசெய்ய மறந்தோமோ அன்றைக்கே நம்முடைய கிராமங்கள் சீரழிந்து விட்டன, சிறப்பிழந்து விட்டன, அழிந்தொழிந்து விட்டன. ஆதலால் கிராம மக்களிடையில் ஒற்றுமையில்லை, நிம்மதியில்லை, அமைதியில்லை, பற்றும் பாசமுமில்லை. எனவே, இவற்றை மீண்டும் கிராமங்களில் உருவாக்க வேண்டுமென்றால்; கிராமங்கள் செழித்து, வளம் பெருக வேண்டுமென்றால்; அந்தந்த கிராமங்களின் தேவர் தேவதைகளை அந்தந்த ஊர் மக்கள் வணங்கியேயாக வேண்டும், வழிபட்டேயாக வேண்டும், பூசைசெய்தேயாக வேண்டும், கும்பிட்டேயாக வேண்டும்.

**<u>நாட்டுக் கடவுள்கள்</u>:-** பல கிராமங்கள் ஒன்றாக இணைந்தது ஒரு நாடு அல்லது நகரம். அதற்குரிய கடவுள்கள் அந்நாட்டுக் கடவுளர்கள் எனப்படுவர். இங்கே நாட்டுக் கடவுள் யாரெனில் காயாரோகணேசுவரர் - நீலாயதாட்சி அம்மையே ஆவார்கள். இதுபோல் உள்ள சீவாலயத்தைச் சேர்ந்த சிவன்கள், சீவன்கள், ஈசுவரர்கள், ஈசுவரிகள், பரமேசுவரர்கள், பரமேசுவரிகள், மகேசுவரர்கள், மகேசுவரிகள், இவர்களைச் சார்ந்த பிறம்மாக்கள், பிறம்மசத்திகள், பிறம்ம தேவிகள், திருமால்கள், திருமகள்கள், கலைமகள்கள், அலைமகள்கள், மலைமகள்கள், கொற்றவைகள், பிள்ளையார்கள், கணபதிகள், விநாயகர்கள், முருகன்கள், ... முதலிய எண்ணற்ற கடவுள்களை நாட்டுக் கடவுள்கள் என்பர்.

இங்கு மிக முக்கியமாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுவது என்னவென்றால் நாம் நம்முடைய குடும்ப ஆண்டவர்களை, குல தெய்வங்களை, கிராமதேவர் தேவதைகளை முறையாகக் கும்பிடாமல், வழிபடாமல், வணங்காமல், பூசை செய்யாமல் நேரடியாக நாட்டுக் கடவுளர்களை, பெரிய கடவுள்களை மட்டும் கும்பிடுவதால், வழிபடுவதால், பூசை செய்வதால், வணங்குவதால் முழுமையாக உரிய பலன் கிடைக்காது! கிடைக்காது! கிடைக்காது! கிடைக்கவே கிடைக்காது!

இங்கே மிக முக்கியமான செய்தி ஒன்றைக் கூற விரும்புகின்றேன். அதாவது உலகிலேயே குடும்ப ஆண்டவர்கள், குல தெய்வங்கள், கிராம தேவர்தேவதைகள், நாட்டுக் கடவுள்கள் என்று நான்கு வகைப்பட்ட கடவுளர்களையுடைய அமைப்பினை உடையவர்கள் தமிழர்கள் மட்டும்தான், இந்துக்கள் மட்டும்தான்; என்றைக்கு நாம் நம்முடைய குடும்ப ஆண்டவர்களை, குல தெய்வங்களை, கிராம தேவர் தேவதைகளை, நாட்டுக் கடவுளர்களை கும்பிட மறந்தோமோ, வணங்க மறந்தோமோ, வழிபட மறந்தோமோ, பூசை செய்ய மறந்தோமோ அன்றைக்கே நம் குடும்பம், குலம், கிராமம், நாடு சீரழிந்து, சிதைந்து போய்விட்டது. இவற்றையெல்லாம் அகற்றி மீண்டும் நம் குடும்பங்கள், குலங்கள், கிராமங்கள், நாடுகள் செழிக்க வேண்டுமென்றால்; நாம் நம் குடும்ப ஆண்டவர்களை, குல தெய்வங்களை, கிராம தேவர் தேவதைகளை, நாட்டுக் கடவுளர்களைக் கும்பிடல் வேண்டும், வழிபடுதல் வேண்டும், வணங்குதல் வேண்டும், பூசை செய்தல் வேண்டும்.

இன்று நம்மிடையே பல பேர்க்கு தங்கள் தங்களுடைய குடும்ப ஆண்டவர் யார்? குல தெய்வம் யார்? என்று தெரியாமல் இருக்கலாம். எனவே, அவர்களெல்லாம் எம் குருதேவரைச் சந்தித்து அவரவர்களுடைய குடும்ப ஆண்டவர்களை, குல தெய்வங்களைத் தெரிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் அவர்களை எப்படி வழிபடல் வேண்டும்? எப்படி வணங்க வேண்டும்? எப்படிக் கும்பிடல் வேண்டும்? எப்படிப் பூசை செய்தல் வேண்டும்? என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட சந்தேகங்களை எங்கள் மடத்தைச் சேர்ந்த எந்த சன்னிதானத்தைக் கேட்டாலும் கூறுவார்கள். நீங்கள் யாரை வேண்டுமானாலும் சந்தித்துப் பேசலாம். விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இன்று நம் இந்துக்களிடையே பெரும்பாலானவர்களுக்கு 'இந்துவேதம்' என்ற ஒன்று இருக்கிறதென்றோ, அதன் செயல்வடிவம்தான் இந்துமதம் என்றோ தெரியாது. அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின் விளைவுதான் இவ்வழிபாட்டு முறைகள் அறவே இல்லாமல் போனது.

எனவே, எங்களுடைய குருதேவர் இந்து வேதத்தை உங்களுக்கு வழங்குவதன் மூலம் உங்களிடையில் குடும்ப ஆண்டவர்கள், குலதெய்வங்கள், கிராமதேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் பற்றிய வழிபாட்டையும், வணங்குதலையும், கும்பிடுதலையும், பூசை முறைகளையும் நடைமுறைப்படுத்த, செயல்படுத்த சொல்லித் தர முன்வந்திருக்கின்றார்.

எனவே நம் குருதேவரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இது நாள் வரை எங்களுக்கு இதையெல்லாம் சொல்லித் தர யாருமே இல்லை! வழிகாட்டுவதற்கு யாருமே இல்லை என்று கூறிக் கொண்டிருந்தீர்கள். இப்போது குருபீடம் வந்திருக்கின்றார். அவரைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் என்றைக்குமே உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் போய்விடும்.

எனவே நம்முடைய குடும்பங்களும், குலங்களும், கிராமங்களும், நாடும் நல்ல வாழ்க்கை வாழ வேண்டுமென்றால் இந்து வேதமும், இந்து மதமும் மீண்டும் நடைமுறைக்கு வர வேண்டும்.

**வளர்ப்போம்! வளர்ப்போம்! இந்துவேதம் வளர்ப்போம்!**
**காப்போம்! காப்போம்! இந்துமதம் காப்போம்!**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் கையெழுத்துப் பிறதியாக இருந்தது. யாருடைய கையெழுத்து என்ற குறிப்பு இல்லை.//**

# இந்துவேதம் கூறும் நான்வகை வாழ்க்கை

ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!
ஓம் குருவே துணை! ஓம் குருவே சரணம்!

இந்துமதத்தில் பற்றும், பாசமும், ஆர்வமும், நம்பிக்கையும் மிகுதியான ஈடுபாடும் உடைய நாகப்பட்டினத்தில் வெளிப்பாளையத்தில் வாழுகின்ற ஆன்மீகப் பெரியோர்களே, தாய்மார்களே, இளம் சிறுவர்களே உங்கள் அனைவருக்கும் பதினெண்சித்தர் மடத்தின் இந்து வேதாகமப் பாடசாலை மாணாக்கர், மாணாக்கியரின் சார்பாகவும், பதினெண்சித்தர் மடத்தின் சார்பாகவும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்துக்களில் பெரும்பாலானவர்க்கு இந்து வேதத்தைப் பற்றியோ, இந்து மதத்தைப் பற்றியோ தெரியாது! தெரியாது!! தெரியாது!!! தெரியவே தெரியாது. இந்துக்களுக்கென்று இந்து வேதம் ஒன்று இருக்கிறதா? என்று கேட்டால் கூட இல்லையென்று சொல்லுபவர்கள் நிறைய இருக்கிறார்கள். நம் நாட்டின் அருளாளர்கள் பாடிய தேவாரங்கள், திருவாசகங்கள், திருவருட்பாக்கள், பாசுரங்கள் முதலியவைகளைத்தான் இந்து வேதம் என்று பெரும்பாலானவர்கள் கூறுவார்கள். ஆனால், இவையெல்லாம் இந்து வேதமல்ல. இவையெல்லாம் இந்து மதத்தின் தோத்தரப் பாடல்கள் ஆகும். அதாவது, நமது அருளாளர்கள் தங்கள் தங்களுடைய சொந்த அநுபவங்களைப் பற்றிக் கூறியவை, பாடியவை. அதாவது, தங்களுக்கு கடவுள் காட்சி அளித்தது பற்றியும், அதன்மூலம் அநுபவித்த அநுபவங்களைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள். ஆனால், இந்துவேதம்

என்ற ஒன்று இருக்கிறது. அது பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் முதல் பீடாதிபதியான ஆதிசிவனுரால் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கப்பட்டது.

இந்த இந்துவேதம் முன்னூற்றுத் தொண்ணூற்ருறு (396) நூல்களேக் கொண்டது. இவைகளேப் பற்றி நமது குருதேவர் விளக்கமாகக் கூறுவார். இந்த இந்துவேதம் கடவுள்களேப் பற்றியும், மனிதர்களேப் பற்றியும், கடவுள்களுக்கும், மனிதர்களுக்கும் உள்ள உறவுகளேப் பற்றியும், கோயில்களேப் பற்றியும், கோயில்களுக்கும் மனித வாழ்வுக்கும் உரிய தொடர்புகளேப் பற்றியும், கடவுள்களே எப்படி வணங்குதல் வேண்டுமென்றும், எப்படி அழுகை செய்ய வேண்டும்? எப்படி தொழுகை செய்ய வேண்டும்? எப்படி எள்ளல் செய்ய வேண்டும்? எப்படி ஏசல் செய்ய வேண்டும்? எப்படி வழிபட வேண்டும்? எப்படி கும்பிட வேண்டும்? எப்படிப் பூசை செய்ய வேண்டும்? என்பதைப் பற்றியும்; மற்றும் எண்ணற்ற பேருண்மைகளேயும் கூறுகிறது. இந்த இந்துவேதத்தின் செயல்வடிவம்தான் இந்துமதம். இந்த இந்துமதத்திற்கு முப்பத்தாறு (36) நூல்கள் இருக்கின்றன. இந்து வேதம் என்பது கொள்கை. அதாவது ஏட்டறிவு. அதாவது Theory. இந்துமதம் என்பது செயல்வடிவம். அதாவது Practical Knowledge.

நம்முடைய இந்துமதம்தான் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும்? என்ன உணவு உண்ண வேண்டும்? எப்படிப்பட்ட உறவுமுறைகளே அமைத்துக் கொள்ள வேண்டும்? என்று மிகத் தெளிவாகத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுகிறது. எனவே, ஒரு **தனிமனித வாழ்க்கை**யை தெரிந்து கொள்ள இந்துமதம் தேவை.

**குடும்ப வாழ்க்கை** என்று எடுத்துக் கொள்வோமாலுல் எப்படிப்பட்ட ஆண், எப்படிப்பட்ட பெண்ணேத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், எப்படிப்பட்ட பெண்ணே எப்படிப்பட்ட ஆண் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், குடும்ப வாழ்க்கையை

எப்படி அன்போடும், பண்போடும், பற்றோடும், பாசத்தோடும்; நட்பு, தோழமை என்றும் சிறப்புற வாழ வேண்டுமென்றும் இந்துவேதம் கூறுகிறது. அதற்குரிய வழிவகைகளை இந்துமதம் நமக்குச் சொல்லித் தருகிறது. எனவே, குடும்ப வாழ்க்கை சிறப்புற அமைய, இல்லறம் இனிமையாக அமைய இந்து மதம் தேவை. அது மட்டுமல்ல, ஒரு மனிதனுக்குத் தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் என்னென்ன தொல்லைகள், துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், சோதனைகள் ஏற்படும் என்றும், அதை எப்படியெல்லாம் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் இந்துவேதமும், இந்துமதமும் மிகமிகத் தெளிவாகத் திட்டவட்டமாக விளக்கிக் கூறுகிறது. எனவே, ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏற்படக் கூடிய தொல்லைகளை, துயரங்களை, தோல்விகளைத் தவிர்த்துக் கொள்ள அதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இந்துமதம் மிகவும் தேவை.

**சமுதாய வாழ்க்கை**யென்று கூறும்போது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்த ஒரு சமுதாயம் எப்படி இருக்க வேண்டும்? எப்படி வழிநடத்தப்பட வேண்டும்? என்று இந்துவேதம் கூறுகிறது. இந்துமதம் அதை நடைமுறைப்படுத்துகிறது. எனவே, சமுதாய வாழ்க்கை சிறப்பாக நடக்க நமக்கு இந்துமதம் தேவை.

**அரசியல் வாழ்க்கை** என்று சொல்லும் பொழுது பல சமுதாயங்களை வழிநடத்தக் கூடிய அரசியல் அமைப்பு எப்படி இருக்க வேண்டும், அரசியல் நடத்தப்பட வேண்டும் என்று மிகத் தெளிவாக இந்துவேதம் விளக்கிக் கூறுகிறது. இந்துமதம் அதை நடைமுறைப்படுத்துகிறது. எனவே, அரசியல் வாழ்க்கை சிறப்புற அமைய இந்துமதம் தேவை.

இங்கு நான்கு வகையான வாழ்க்கையைப் பற்றி இந்துவேதம் கூறியிருக்கிறது. (1) தனிமனித வாழ்க்கை, (2) குடும்ப வாழ்க்கை, (3) சமுதாய வாழ்க்கை, (4) அரசியல் வாழ்க்கை.

எனக்கு முன் பேசிய என் சகோதரி கடவுள்களைப் பற்றிக் கூறும் போது நான்கு வகையான கடவுள்களைக் கூறினார். மேலும், சித்தர்கள் எதையுமே வரையறுத்து எண்ணிக்கையிட்டு, அறுதியிட்டு, உறுதியாகக் கூறுவார்கள் என்று கூறி நான்மறைகள், நான்முறைகள், நான் நெறிகள், நான்வேதங்கள் என்று எண்ணற்ற எடுத்துக்காட்டுக்களைக் கூறினார்கள். அதுபோல சித்தர்கள் மனித வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது நான்கு வகையான வாழ்க்கை என்று கூறுகிறார்கள். அதைப் பற்றி யாம் முதலில் விளக்கமாகக் கூறினோம். அதாவது தனிமனித வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை. இந்த நான்கு வகையான வாழ்க்கையைப் பற்றியும் நாம் முழுமையாகத் தெரிந்து கொள்ள இதன்படி நடக்க நமக்கு இந்து மதம் தேவை.

இந்த இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள அனைவரும் பதினெண்சித்தர் மடத்துடன் தொடர்பு கொண்டு பயனடையுங்கள்.

எனவே, இந்து வேதம் வளர்க்கப்பட வேண்டும், இந்துமதம் காப்பாற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் மேற்கண்ட நான்கு வகையான தனிமனித வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்! சிறப்பாக இருக்கும்!! சிறப்பாக இருக்கும்!!! இதற்காகத்தான் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறிட வந்திருக்கிறார். எனவே, எங்கள் குருதேவரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எங்கள் பதினெண்சித்தர் மடம் அச்சிட்டுள்ள புத்தகங்களையும், அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் வாங்கிப் படியுங்கள். முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம் வாங்கிப் பயனடையுங்கள்.

உங்களது தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான பாதிப்புகளையும், கறைகளையும், குறைகளையும் போக்கிக் கொள்ள உங்களது பாதிப்புக்களுக்குப் பரிகாரங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். தீட்சை பெற்றுக் கொள்ளுங்கள். பத்தி சத்தி சித்தி முத்திக்குரிய வழிவகைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். இதற்கு மேலும் கூடுவிட்டுக் கூடு பாய்தல், ககனத்தில் பறத்தல், உருவத்தை மாற்றுதல், கடவுள்களோடு கடவுள்களாக மாறுதல், மரணமில்லாப் பெருவாழ்வு பெறல், ... முதலியவைகளை எல்லாம் கூடத் தெரிந்து சித்தராக மாறலாம். எங்களையெல்லாம் சித்தராகவே மாற்றிய அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் உங்களையும் சித்தராக மாற்றுவார். வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!! தொடர்பு கொள்ளுங்கள்! தொடர்பு கொள்ளுங்கள்!! தொடர்பு கொள்ளுங்கள்!!!

**இந்து வேதம் வளர்ப்போம்!**
**இந்து மதம் காப்போம்!**

என்ற சூளுரையோடு என் உரையை முடிக்கிறேன்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: கையெழுத்துப் பிறதி நகலாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்ற குறிப்பு இல்லை.//**

# குருபூசை

**ஆவணி** - 1, 43,73,126

குருவே உங்கள் நினைவு நாள்!
உங்களின் மெய்யடியார்கள் உங்களை நினைந்து
கண்ணீர் சிந்தும் நாள்!
ஆவணி 1ஆம் நாள் இரவு ஒன்பது மணி
எங்கள் குருதேவர் உறங்கும் நாள்
வாழ்வில் எப்போதும் உறங்காது இப்போதுதான் உறங்கினர்.
இந்த நாள் இந்துமதத் தந்தை தன்னை
மறைத்துக் கொண்ட நாள்.
இந்த நாள் தமிழினத்தின் தலைவரை இழந்த நாள்.
இந்த நாள் உலகின் தத்துவ நாயகத்தை இழந்த நாள்.
இந்த நாள் சித்தரடியான்கள் சித்தரடியாள்களின்
கண்ணீர் நாள்.
இந்த நாள் தமிழர்களுக்கு துக்கத்தையும்
சோகத்தையும் தரும் நாள்.
எங்கள் குரு உறங்கும்போதே இவ்வளவு வேதனை என்றால்;
அவர் உண்மையாகவே சென்று விட்டார் என்றால்
அந்நாள் இவ்வுலகம் அழியும் நாள் அல்லவா?
தத்துவத்தின் வித்தகரே! தன்னிகரில்லா சித்தரே!
நித்திரையில் நீங்கள் இருக்க,
நிம்மதி யில்லாமல் நாங்கள் தவிக்க
சித்தமெல்லாம் தங்கள் பணியே என
நாங்கள் செயல்பட அருளுங்கள்!

அறிக்கை எண்: 786

# இ.மு.க.
# I.M.K.

# இந்துவேத முன்னேற்றக் கழகம்

**பதினெண்சித்தர் மடம் - அறக்கட்டளை**

ஆதிசிவனுர் அமுதத் தமிழில் அருளியுள்ள
இந்துவேதம் கற்றிட வாரீர்!
முத்தமிழின் இந்துவேதம் ஓதி
பாதிப்பு அகற்றி பாதுகாப்பு பெற வாரீர்!

தமிழ் எழுத்தையும் சொல்லையும் பயன்படுத்தி
அருளை மருந்தாகவும், விருந்தாகவும்
விளைவித்திட வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

<u>தொடர்பு</u>:- ஞானுச்சாரியார், இந்து வேதாகம பாடசாலை, பதினெண்சித்தர் மடம், காரணோடை, சென்னை - 67.



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

"... நாம் நம்முடைய குடும்ப ஆண்டவர்களை, குல தெய்வங்களை, கிராமதேவர் தேவதைகளை முறையாகக் கும்பிடாமல், வழிபடாமல், வணங்காமல், பூசை செய்யாமல் நேரடியாக நாட்டுக் கடவுளர்களை, பெரிய கடவுள்களை மட்டும் கும்பிடுவதால், வழிபடுவதால், பூசை செய்வதால், வணங்குவதால் முழுமையாக, உரிய பயன் கிடைக்காது! கிடைக்காது! கிடைக்காது! கிடைக்கவே கிடைக்காது!..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-